# தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும்
# வர்த்தகத் துறை

## சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

## மானியக் கோரிக்கை எண். 27

## அறிவிப்புகள்
## 2023–2024

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும்
வர்த்தகத்துறை

சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

மானியக் கோரிக்கை எண். 27

# அறிவிப்புகள்
2023 -2024

துரைமுருகன்
நீர்வளத் துறை அமைச்சர்

1) கனிம ஆய்வினை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு மாநிலக் கனிம ஆய்வு நிதியம் உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டில் படிந்துள்ள கனிமங்களின் இருப்பு, தரம், புவியமைப்பியல் ஆகியவற்றை அறியும்பொருட்டு கனிம ஆய்வு மேற்கொள்ள தமிழ்நாடு மாநிலக் கனிம ஆய்வு நிதியம் ஒன்று உருவாக்கப்படும். இந்நிதியத்திற்கு சிறுகனிம குத்தகைதாரர்கள் செலுத்தும் உரிமக்கட்டணத்தில் 2% தொகை நிதியாக பெறப்படும். இதனை மேற்கொள்ள தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகள், 1959 ல் திருத்தம் மேற்கொள்ளப்படும். சிறுகனிம குத்தகைதாரர்களிடமிருந்து பெறப்படும் 2% உரிமத்தொகையின் மூலம் அரசுக்கு ஆண்டுதோறும் சுமார் 6 கோடி ரூபாய் வருவாய் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

2) தமிழ்நாடு கனிம நிறுவனத்தில் எரிவாயுவை பயன்படுத்தி கிராபைட் கனிமத்தை உலர்த்தும் முறை 50 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு கனிம நிறுவனம், சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள கிராபைட் ஆலையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் உற்பத்தியை மேம்படுத்த 50 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில், டீசலுக்கு பதிலாக எரிவாயுவை பயன்படுத்தி கிராபைட்டை உலர்த்தும் முறை செயல்படுத்தப்படும். இதன் மூலம் கார்பன் வெளியேற்றம் குறைக்கப்பட்டு எரிபொருள் செலவு 25 சதவிகிதம் மீதமாகும்.

3) தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் ஒன்பது கிரானைட் சுரங்கங்கள் 10 கோடி ரூபாய் செலவில் மின்மயமாக்கப்படும்.

தமிழ்நாடு கனிம நிறுவனம் சுரங்கப்பணி மூலம் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகளை குறைக்கும் பொருட்டும், எரிபொருள் செலவினைக் கட்டுப்படுத்தும் பொருட்டும் நிலையான சுரங்க பணிகளுக்காக, 10 கோடி ரூபாய் செலவில் ஒன்பது கிரானைட் சுரங்கங்கள் மின்மயமாக்கப்படும். இதன் மூலம் கார்பன் உமிழ்வு (Carbon foot print) குறைக்கப்படுவதுடன் எரிபொருள் செலவு சுமார் 40 சதவிகிதம் மீதமாகும்.

**துரைமுருகன்**
நீர்வளத் துறை அமைச்சர்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.